ஶ்ரீ

# பைந்தமிழ் ஞானம்

மாதாந்த ஆத்ம சிந்தனைச் சஞ்சிகை

— தை 1992 —

நிறுவனரின்

## சிந்தனைத் தொகுப்புகளும் பிற ஆக்கங்களும்

''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு''

பொது நிறுவனங்களுக்கான

★ விநாயக தருமநிதிய இலவச வெளியீடு ★

ஒளி : 1 க.   சுடர் : 1 க.

— சிக்கனம் - சமத்துவம் - உடலுழைப்பு —

# எமது வேண்டுகோள் :-

விநாயகர் தரும நிதிய நிறுவனரின் ஆத்மசிந்தனை மாதாந்த சஞ்சிகையான "அறத் தமிழ் ஞானம்" என்னும் இலவச வெளியீட்டைப் பெறவிரும்பும் நூலகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொதுமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொது நிறுவனங்கள் எம்மிடம் நேரிலோ கடிதமூலமோ பெயர்களைப் பதிவுசெய்து இவ் வெளியீட்டை இலவசமாக பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். தனிப்பட்ட வாசக நேயர்கள் இவ் வெளியீட்டை நேரிலோ கடிதமூலமோ பெறவிரும்பின் 7/- ரூபாவிற்கான தபால் தலையை (முத்திரை) அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். கடித முகப்புக்களில் தமிழ் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆங்கிலத்தில் மட்டும் வரும் கடிதமுகப்புள்ள கடிதங்கள் வரவேற்கப்பெற முடியாதவை.

இவ் அறநெறிச் சிந்தனை அறிவின் மூலம் கடன்மையைச் செய்வோரது ஐந்துபூத விகிதாசாரத்தில் ஒளிப்பூதம் கூடி அமைவதால் ஓரிரு பிறப்புக்களில் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்கமுடியும் என்பதை அவர்கள் காண முடியும்.

நாம் தபாலில் அனுப்பும் பிரதிகளில் சில கிடைக்காமல் இருப்பதாகவும் அறிகிறோம்.

---

புலோலி மேற்கு விநாயகர் தரும நிதிய அறநெறி விஞ்ஞான மன்றத்தினரின் அறநெறித் தேர்வு 1992-ல் 5-ம், 6-ம், 7-ம் ஆண்டில் கல்விபயிலும் பாடசாலை மாணவர்களையும் பங்குபற்றி தங்கப்பதக்கத்தோடு கூடிய பல ரொக்கப் பரிசில்களையும் பெற்று மனநிலை உயர்வடைய கடமையை ஆற்றுங்கள். மேலதிக விபரங்களுக்கு விநாயகர் தரும நிதியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

ஏன் அறநெறியை வளர்க்கவேண்டும் என்பதற்கான உண்மையை ஆராய்வோம். "அறஞ்செய விரும்பு" என்று கற்றுவிட்டால் மட்டும் போதாது. அவ்விருப்பம் எமது ஆன்மாவில் என்ன செய்கிறது என்பதை அறிய வேண்டும். அறம் செய்வதற்கான தியாகம் செய்யும் விருப்பம் எமது சிந்தனை, சொல், செயல்களில் சிந்திப்பதை சொல்லாக்கி சொல்லை செயலாக்கும் போது ஐந்துபூத விகிதாசாரத்தில் ஆசைக்குரிய நீர்ப்பற்றைக் குறைத்து காற்று, ஒளிப் பூதங்களை கூட்டுவதால் மேல்நிலை அடையும் அறிவு உருவாகிறது. ஆகவே அறநெறியைக் கற்பவர் மனதில் தெய்வீகப் பண்பு மேலோங்கும் சூழ்நிலையை உருவாக்குகிறது. மனிதவர்க்கத்தில் இப்பண்பு மேலோங்க வேண்டுமாயின் இளம் சந்ததியினர் இவற்றை நன்கு கற்கவேண்டும். நாடு நலம்பெற வேண்டும். தமிழ்ச் சமுதாயம் தெய்வீகப் பண்பை அடைந்து பிறப்பை நீக்கவேண்டும், வள்ளுவர்போல் மக்கள் உருவாக வேண்டும்.

# முன்னுரை

நாம் இதுகாலவரையில் வெளியிட்ட ஆத்மசிந்தனைக் கருத்துக் களை தமிழ் மக்கள் சகலரும் உணரவேண்டும் என்ற பேரவாவினால் சமய, சமூக. மொழி உண்மைகளை வெளிக்கொணர்ந்து மக்கள் உண்மை வழியில் செயல்பெற்று நாடு முன்னேறவேண்டுமென்ற பெரு நோக்கோடு வெளியிட விரும்புகிறோம். பொது நிறுவனங்கள் தங்கள் கருத்துக்களை அறிவித்தால் பயன் பெறக்கூடியவற்றை எதிர்வரும் இதழ்களில் வெளியிடமுடியும். அறநெறிதான் எமது தமிழ் சமுதாயத்தை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்லும் எனற சிந்தனை நோக்கில் அறநெறி மணி விதைகளை சிறுவர் மனதில் விதைப்பதற்காக தேர்வு கள் நடத்தி பரிசில்கள் வழங்க செயல்பெற்று வருகிறோம். பாரதியாரின் கனவு நனவாகவேண்டும்.

''புத்தம்புதிய கலைகள்-பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே-அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை-அவை சொல்லும் திறமை தமிழ்மொழிக்
கில்லை''

என்று பேதை ஒருவன் உரைத்ததாக பாரதியார் தனது வேதனையை வெளிப்படுத்துகிறார்.

''திறமையான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்றும் கூறிச் சென்றுள்ளார்.

ஆகவே நாம் ஐந்து பூதச் செயல்களின் நுட்பத்தை மக்களுக்கு உணர்த்த உண்மை வழியில் நின்று ஆராய்ந்து செயல் பெறுகிறோம். தவறுகள் ஏற்படின் எடுத்துக்கூறி உண்மையை வெளிக்கொணரும்படி வேண்டுகிறோம்.

எமது தமிழ் சமுதாயம் சிக்கனம். சமத்துவம், கடின உடலுழைப்பு இவற்றிற்கு முதலிடம் கொடுத்து ஒவ்வொரு கிராமத்திலும் உண்மை வழியில் செயல்பெற ஒரு சிறு பகுதியினர் தியாகம் செய்தால் ஓரிரு வருடங்களில் எமது நாடு யப்பானைப்போல் அடுத்தவரிடம் கையேந் தாத ஒரு நாடாக வளரமுடியும். இது முற்றிலும் உண்மை.

எமது செயல்களை ஊன்றிக் கவனியுங்கள். நாம் உண்மைவழி மீறினால் நீங்கள் இதை விட்டு விலகிச் செல்லுங்கள். சரியெனத் தோன்றினால் உங்கள் பிறப்பை நீக்க ஆவன செய்யுங்கள்.

''**அறத்தமிழ் ஞானம்**'' என்னும் மாதமிருமுறை வெளிவரும் இச் சஞ்சிகையை எமது உள்ளத்தில் எழுந்த அறிவு வேட்கையாலும் எமது உயிர் பிரியமுன் இதைச் செய்தே ஆகவேண்டும் என்ற அவசர நிலை யிலும் வெளியிட முன்வந்துள்ளோம். இச் சஞ்சிகை பொது நிறுவ னங்களுக்கு இலவசமாகவும் தனியாட்களுக்கு குறைந்த விலையிலும் வழங்க எண்ணியுள்ளோம். தேவையான பொது நிலையங்கள் முக வரியை அறிவித்து பல மக்களுக்கும் பயன்பெறும்படி செயல்பெறுமாறு அன்புடனும் பண்புடனும் இருகரங்கூப்பி வேண்டுகின்றோம்.

— நிறுவனர்.

# உண்மையை உணர்ந்தால்...

22-12-1991 இன்று மார்கழித் திருவாதிரை நாள். மாணிக்கவாசகரின் கசிந்துருகும் வாசகத்தை மனம், வாக்கு, காயம் என்பவற்றுள் முதலாவதான எமது மனத்தில் உண்மையைக் குடைந்து அவரது புராண உண்மைகளை ஞான அறிவு மூலம் உணர்ந்து எமது ஆன்மாவிலுள்ள ஐந்து பூத விகிதாசாரத்தை மேல் நிலை அடையக்கூடிய ஞான ஒளியில் செலுத்துவதற்கான நாளாக ஞானிகள் வகுத்துள்ளார்கள்.

இன்று எம்மில் பெரும்பான்மையோர் இக் கருத்தை உணர முடியாமல் எனது ஆன்ம அலையின் ஐந்து பூத விகிதாசாரம் கீழ் நிலைக்கு மாறுபடக்கூடிய செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

எடுத்துக்காட்டாக எமது அரசாங்கம் இன்று நடைபெறும் மகாநாட்டில் மனித உரிமை மீறலைப்பற்றி வேறு நாடுகள் எம்மீது குறை கூறுவது தவிர்க்கப்பெறல்வேண்டுமென்று கூறுகிறார்கள். உண்மையை மதிக்காமல் திரும்பத் திரும்ப பொய்யை நாடுகிறார்கள். புத்தபிரான் ஏன் ஞானம் அடைந்தார் என்பதற்கு அவரது சமயக் கொள்கைகளை பின்பற்றும் மக்கள் என்ன கூறப்போகிறார்களோ நாம் அறியோம். புத்தபிரான் உண்மையை நாடியே ஞானம் அடைந்தார். அவர் இன்று இருந்தால் இதைப்பற்றி என்ன கூறுவார் என்பதை அரசாங்கத்தில் உள்ளவர்கள் தமது மனத்தில் இருத்தி உண்மையைக் குடைந்து புத்த பிரானது ஞான வழியில் உணர்ந்தால் அவர்களது ஆன்ம அலையின் ஐந்துபூத விகிதாசாரம் மேல்நிலையடையக்கூடியதாய் மாறுபட்டு பிரச்சினை நீங்கி சிறிது காலத்தில் யப்பானைப்போல் எவரிடமும் கையேந்தாத ஒரு நாடாக மிளிர்வதைக் காணமுடியும். மனதில் அவ் எண்ணம் ஏற்பட சொல்லாக அது வெளிவரும். சொல்லில் வருவது செயல் பெற்றால் நாடு புதுவிதமாய் அமையும். எந்தச் சட்டங்களும் விதிமுறைகளும் வகுக்கும்போது முழு உண்மையில் வகுக்கப்பெற்றாலே அவ்விதிகளும் சட்டங்களும் எக்காலத்தும் அழியாவரம் பெற்றிருக்கும. பொய்வழியில் உருவாக்கிய சட்டங்கள் அடிக்கடி மாற்றமடைவதையும் அழிந்து போவதையும் கண்டுள்ளோம். மாவட்டசபை உருவாக்கம் சில நாளில் மறைந்துவிட்டது.

# போதையைத் தவிருங்கள்

ஏற்கெனவே எமது சமுதாயம் வெளிநாட்டு மோகத்தினாலும் அதன் பெறுபேறான கலாசாரச் சீரழிவினாலும் சிதைந்துகொண்டிருக்கிறது. போதைப் பொருளும் சேர்ந்துவிட்டால் எமது எதிர்காலச் சந்ததிகளே அழிந்துவிடும். ஆகவே போதைப் பொருள்கள் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் நாம் அறிவதுடன் எமது சமுதாயத்திற்கும் அதனைப் பரப்பி போதைப் பொருள் பாவனையை தடுப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

போதைப் பொருள் பாவனையாளர்கள் இயற்கையிலேயே கெட்டவர்களோ மோசமானவர்களோ அல்ல. பெரும்பாலும் சந்தர்ப்பவசத்தால்தான் அதற்கு அறிமுகமாகி பின் அடிமையுமாகிறார்கள். பெரும்பாலும் உயர் வகுப்பு மாணவர்களும், வாலிபர்களும் சில யுவதிகளும் கூட போதைப் பொருள்களுக்கு அறிமுகமாகிறார்கள். பிரச்சினைகளிலிருந்து தப்ப எண்ணி போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள். அது எப்படியிருக்கும் எனப் பரீட்சித்துப் பார்க்க முயன்று பலர் அடிமையாகிறார்கள். போதைப் பொருள்களின் தரத்தை நிர்ணயிக்க முகர்ந்து பார்க்கும் வியாபாரிகளும் அடிமையாவதுண்டு. ஆரம்பத்தில் எப்போதாவது ஒருமுறைதான் உபயோகிப்பார்கள். பிறகு மாதமொருமுறை என நினைப்பார்கள். இதைக்கூட நான் நினைத்தால் நிறுத்திவிடுவேன் என்பார்கள். ஆனால் மனம் சொன்னபடி கேட்காது. சனி, ஞாயிறு தினங்களில் மாத்திரம் என எண்ணி இறுதியில் தினமும் உபயோகிக்க வேண்டி நேரிடும். போதைப்பொருளுக்கு அடிமையாகும் ஒருவனின் மனநிலை மாத்திரமன்றி உடல்நிலையும் பாதிப்படைகிறது.

போதைப்பொருள் அடிமைகள் தமக்குத் தாமே தீங்கிழைப்பதுடன் நின்றுவிடுவதில்லை. அவரது தனிமனிதப் பிரச்சினை அவரது குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் பொருளாதாரப் பிரச்சினையாகவும்,

கௌரவப் பிரச்சினையாகவும் மாறி இறுதியில் சமூகப் பிரச்சினையாக வளர்கிறது. போதைப்பொருள் அடிமைகள் களவு, கொள்ளை, கொலை, விபச்சாரம் போன்ற சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். இதனால்தான் போதை தனிமனிதப் பிரச்சனையாக நின்றுவிடாது சமூகப் பிரச்சனையாக வளர்ந்து விடுகிறது. எனவே சமூகக்கட்டுப் பாடுள்ள ஒவ்வொருவரும் நான் எத்தருணத்திலும் போதைப் பொருளை உபயோகிக்கமாட்டேன் எனத் திட சங்கற்பம் எடுத்து அதன்படி ஒழுகவேண்டும்.

போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பிரச்சனைகள், அழிவுகள் பற்றி தனது சுற்றாடலிலும், சமூகத்திலும் பிரதேசத்திலும். நாட்டிலும் பிரச்சாரம் செய்யவேண்டும். போதைப் பாவனையை சிறிது சிறிதாக நிறுத்தலாம் என்று நினைத்தால் முடியாது. ஒரேயடியாகக் கைவிட்டு இனி போதைப் பொருள்களை எச்சந்தர்ப்பத்திலும் பாவிப்பதில்லை என்ற உறுதியான தீர்மானத்தையும் எடுக்க வேண்டும்.

— டாக்டர் முருகானந்தன்

யப்பானியர் போல் சொந்தக்காலில் நிற்கவேண்டும். தியாக மனப் பக்குவத்தை வளர்த்து, அடுத்தவருக்கு உதவும் உள்ளம் ஊற்றெடுக்க வேண்டும். ஒரு கொடி வர்க்கத்தை சிறுபராயத்தில் அது படர்வதற்குரிய அணை துணைகளை அமைத்து, ஒழுங்கான முறையில் படர விட்டாலே தரமான, திறமான உற்பத்திகளை பெறமுடியும். அவ்வாறே மனிதன் தெய்வப் பண்பை அடைய வேண்டுமானால் அவனது இளம் வயதில் அதற்குரிய எண்ணக்கரு தோன்றவேண்டும். அக்கரு தோன்றவேண்டுமாயின், அறநெறிக் கல்வியை அவர்கள் மனதில் விதைக்க வேண்டும்.

- நிறுவனர்

# நிறுவனரின் சிந்தனைகள்

திருவாசகத்திலுள்ள "அழுதால் உன்னைப் பெறலாமே ஈசா உட லிடம் கொண்டாய், கண்ணீர் ததும்பி வெதும்பி, ஊடகத்தே நின்று ருக ஊனினை உருக்கி, கசிந்துருக வேண்டுவனே" போன்ற வாசகங்கள் உண்மை வழியில் செயல் பெறுமிடத்து எமது நீர்ப்பூதம் குறைய; குறைந்த இடத்தை நிரப்புவதற்காக ஒளிப்பூதம் கூடுகிறது. சூடு கூடுதல் காரணமாகவே எந்த ஒரு பொருளும் உருகமுடியும். உருகும் போது அப்பொருளிலுள்ள நீர்ப்பற்றுக் குறைகிறது. ஆகவே ஞான ஒளி பெருகுகிறது.

பிட்டு விற்றுச் சீவியம் செய்யும் **செம்மனச் செல்வி** எனும் வயோதிப மாது உடையாத பிட்டுக்களைக் காசுக்கு விற்றுவிட்டு உதிரியான பிட்டுக்களையே கூலியாகத் தருவேன் என்கிறார். சிவபெருமானும் அதற்கு உடன்பட்டு கூலி வேலை செய்கிறார். கூலி வேலையைச் சரிவரச் செய்யாத காரணத்தால் பிரம்படி படுகிறார். அப்பிரம்படி சகல சீவராசிகளுக்கும் படுகிறது. இதிலிருந்து நாம் அறியும் உண்மைகள் பல. பலகாரம்விற்கும் மாதிற்கு எல்லாம்வல்ல இறைவனே கூலியாளாகிறார். ஆகவே உடல் உழைப்பு முதலிடம் பெறுகிறது பிட்டு விற்கும் அம்மை உதிர்ந்த பிட்டை விற்பனை செய்யாமல் சரியான பிட்டுக்களையே விற்பதால் தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றுகிறார்.

மாணிக்கவாசகர் புராணத்திலுள்ள உண்மைகளை உள்ளத்தைக் குடைந்து ஊன்றிப் படிப்பவர்களுக்கு ஐந்து பூத விகிதாசாரம் மேல் நிலைக்கு மாறுபடுவதை அவதானிக்க முடியும். அவரது வாசகங்களை நாம் எமது கடமையாகக் கொள்ளுமிடத்து அவை எமது ஐந்து பூத விகிதாசாரத்தை மேல் நிலையடையக் கூடியதாய் மாற்றுகின்றன. மந்திரிப்பதவி வகித்த எவரும் குதிரை வாங்கிவரும்படி அரசன் கொடுத்த பணத்தை பசிதீர்க்கும் அன்னதானத்திற்கு செலவழிக்க மாட்டார்கள். தனக்கு ஒரு நல்லகுதிரை வாங்கவே விரும்புவார்கள். இன்னொருவர் சொத்தைக் கையாடினால் அமையும் தண்டனையை அறிந்த ஒருவரே மந்திரியாய் வரமுடியும். ஆனால் அவரது ஐந்துபூத சேர்க்கை சுக வாழ்வை விரும்பாது அறநெறியை நாடுவதற்குரியதாய் அமைந்த காரணத்தால் வினைப்பயனாய் வந்த கஷ்டத்தை அழுதழுது அநுபவித்து வியர்வை சிந்தி உடலிலுள்ள நீர்ப்பற்றுக் குறைய அக்குறைந்த அளவுக்குரிய ஒளிப்பூதம் கூடி ஞான அறிவு உருவாகிறது.

கடமையைச் சரிவரச் செய்பவருக்கே இறைவன் கூலியாளாகிறார். தொழிலில் ஏற்றத்தாழ்வு கிடையாது. கடமை தவறும்போது அதற்குரிய தண்டனை எதுவிதமும் கிடைத்தேதீரும். கடமையில் கவனம் செலுத்

தாத போது ஐந்துபூத விகிதாசாரத்தில் நீர்ப்பூதம் கூடி அதற்குரிய சோம்பலை உருவாக்கி வினைப்பயனை கஷ்டத்தை அடையநேரிடுகிறது.

சிவபெருமானே கடமை தவறி தண்டனை அடைகிறார் என்றால் மற்றவர்கள் கடமை தவறுவதைப் பற்றியும் அதனால் விளையும் தண்டனையைப் பற்றியும் நாம் சொல்ல வேண்டியதில்லை. சிவபெருமான் நினைத்தால் வைகை ஆற்றையே ஒரு நொடியில் அடைக்க முடியும். கூடையில் தானே மண்ணைக் கோலி தனது தலைக்கு தானே உயர்த்தி தானே சுமந்து செய்வதை நோக்கினால் கடமை உணர்வு எப்படி அமையவேண்டும் என்பதை ஊகிக்க முடிகிறது. சிக்கனம், கடும் உடலுழைப்பு, சமத்துவ மனப்பான்மை இங்கு முதலிடம் பெறுகிறது.

விரதநாட்களை இன்றுள்ள நிலையில் அமைத்ததற்கான காரணத்தை ஆராய்வோம். மாதாவுக்குரிய நாளாக சித்திரைமாத பூரணை தினத்தையும் பிதாவுக்குரிய நாளாக ஆடி அமாவாசைத் தினத்தையும் அமைத்துள்ளார்கள். உஷ்ணம் கூடிய சித்திரை மாதத்தில் குளிரற்ற அமாவாசை தினம் கூடுதலான உஷ்ணமாயிருக்கும். அதேபோல குளிருள்ள ஆடிமாதத்தில் குளிர்கூடிய பூரணை தினம் குளிர் கூடுதலாய் அமையும்,

சீதோஷ்ணத்தைச் சமன்செய்து உடல்நலத்தைப் பேணும் வகையில் உஷ்ணம் கூடிய காலத்தில் குளிர் நாளையும் குளிர் கூடிய காலத்தில் உஷ்ண நாளையும் அமைத்துள்ளார்கள். ஐப்பசி, கார்த்திகை மாதங்களான குளிர்கூடிய மாதங்களில் கந்தசஷ்டி என்றும் விநாயகர் சஷ்டி என்றும் திருவெம்பாவை என்றும் அநேகமான நாட்களை விரத நாட்களாய் அமைத்துள்ளார்கள். நீர்ப்பூத ஆதிக்கமுள்ள குளிர்கூடிய காலத்தில் உணவைக் குறைப்பதன் மூலம் நீர்ப்பூதம் கூடுவதைக் குறைக்கலாம். வெளியிலும் உடம்பினுள்ளும் குளிர் கூடினால் கஷ்டப்பட நேரிடும். ஆகவே இவ் விரத நாட்களை இக்காலங்களில் அமைத்ததை ஐந்துபூத சேர்க்கையை கீழ் நிலையடையாது சமன்செய்யும் காரணத்திற்காகவே என்பது நன்கு புலப்படுகிறது.

---

எமது கடைசி வேண்டுகோளை தத்துவ அறிவு குறைந்த சிலர் தவறு என எண்ணுகிறார்கள். தத்துவ உண்மைகளை அறிந்து நடக்க ஆரம்பித்தால், எவரது உடம்பும் சுகம்பெற முடியாது, விளக்கங்கள் தேவையானால் நேரில்பெறமுடியும். கீதை உபதேசத்தில் கடமை காரணமாக, அர்ச்சுனன் தனது சகோதரர்களையே அழிக்கிறான். கடமையைச் சரிவரச் செய்பவர்க்கு இன சனம் என்ற பாகுபாடு கிடையாது. நித்திரையாய் இருப்பவனை எழுப்பலாம். நித்திரைபோல் உள்ளவனை எவ்விதத்திலும் எழுப்ப முடியாது.

# இது எங்கள் நாடு
# எம் கையை ஓங்க வைப்போம்

வாழ்வியலில் நிற்கும் இன்றைய இளைஞர்கள், யுவதிகளிடம் ஒரு தப்பபிப்பிராயம் நிலைபெற்றுக்கொண்டு வருகின்றது. '' இந்த நாட்டில் தொழில் கிடையாது. அப்படிக் கிடைத்தாலும் முன்னேறமுடியாது. எப்படியாவது வெளிநாட்டிற்குப் போய்விடவேண்டும்.'' பெற்றோரிடமும் இதே அறிவுதான். தமக்கு சமக்கடன் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. எல்லாப் பிள்ளைகளையும் வெளியில் அனுப்பி விடுவோம் என்று செயற்படுகிறார்கள்.

இப்படியே போய்க்கொண்டிருந்தால் இந்த நாட்டின் எதிர்காலம் நினைக்கமுடியாத நிலையாகும். வெளி நாட்டையே நம்பி - அடிமைச் சமுதாயத்தை உருவாக்கி, வெறும் பணத்தையே நோக்காகக் கொண்டு இங்கே எதுவித பொருளாதார - தொழிற்துறை முன்னேற்றமுமின்றி. சீரற்ற பண்பாட்டுக்கலப்புடன் கூடிய பாரம்பரியம் உருவாகிக்கொண்டிருக்க வழி தேடுகின்றோமா? வெள்ளையன் கண்டிராத பெயர் வகைகளை பிள்ளைகளுக்கு சூட்டுகிறார்கள். டிலக்சன், வியூட்டி. மவ்வா, கீத் இப்படியே ஒரு மொழிக்கும் ஒவ்வாத பெயர்கள். உறவினர்களெல்லாம் ஒன்றுகூடி மேளதாளம் முழங்கி தொலைக்காட்சிப் பதிவில் மாப்பிள்ளை பங்குபற்றாத மணவிழாக்களும் இடம்பெறத் தொடங்கி விட்டன.

பிள்ளைகளுக்கென வகைதொகையற்று சீதனத்தை வழங்குவோர் கேளிக்கைகள், விடியவிடிய திருவிழாக்கள், பேருக்கும் புகழுக்குமாக தேவையற்ற விரயங்களுக்கு வழங்குவோர், தங்கள் தங்கள் வர்க்கங்களுக்கென அருகருகே பற்பல கோயில்களை உருவாக்குகிறார்கள். திரும்பத் திரும்ப இடித்துக் கட்டுகிறார்கள். இந்த நாட்டு ஆலயங்களில் இருக்கிற தேர்கள் போதாதென்று இன்னும் தேர் கட்டுவதற்கு திட்டம் போடுகிறார்கள். வருடத்தில் ஒருநாளைக்கு இழுப்பதற்காக பல லட்ச ரூபா செலவில் - எம்நாட்டு உற்பத்திகள் அற்ற நிலையில் சகல ஆலயங்களுக்கும் கட்டாயம் சிற்பத் தேர்கள் தேவைதானா?

இப்படியான பாரிய செலவீடுகளை ஒன்றிணைத்து சீமெந்துத் தொழிற்சாலைகள், பத்திரிகைத்தாள் உற்பத்தி சாலைகள், பாய் உற்பத்தி, ஆணி உற்பத்தி இன்னோரன்ன உற்பத்தி சாலைகள், குடிசைக் கைத்தொழில் உருவாக்குதல் போன்ற சிந்தனைகள் விடுபட்டுப் போயினவா? சுய உற்பத்திகளைப் பெருக்குவதுடன் இளம் சந்ததியினருக்கு தொழில் வாய்ப்பை வழங்கத்தக்க முறையில் செயல்பெற முடியாதா? ஒரு தையல் ஊசிக்குக்கூட வேறுநாட்டு உற்பத்தியை எதிர்பார்த்து வாழுகின்ற வாழ்க்கையாகி விட்டது. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முற்பட்ட மூத்த தமிழ்ப்பழங்குடி என்ற பெருமைபேசி வாழ்ந்தோம். இப்படியான நாங்கள் என்ன மறுமலர்ச்சியை ஏற்படுத்தினோம்.

வர்க்கபேதங்களை வளர்த்தெடுத்து. இதயத்தில் சுத்து மாத்துக்களையும், தந்திரங்களையும் சுமந்து கொண்டு நான்தான் கூடுதலாக கோவிலுக்கு செல்கிறேன். கூடுதலாக வணங்குகிறேன் - என்ற அகங்காரத்தை கூடுதலாக வளர்த்து விட்டதுதான் எமது வினைப்பயனாக இருக்கிறது.

பேச்சளவில் வெட்டிப்பேச்சில் வீரர்கள். சச்சரவு ஒன்று வந்துவிட்டாலோ மனச்சாட்சியை முற்றுமுழுதாக கொலை செய்ய ஒரு கணமேனும் தயங்க மாட்டார்கள். தங்கள் தவறை நியாயப்படுத்த, மூடி மறைக்க பொய்க்கு மேல் பொய்யை அடுக்கிக்கொண்டே போவார்கள். நியாயத்தை நிலைநிறுத்த இவர்களுடன் கதைத்து யாரும் வெல்ல முடியாது. காலந்தான் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றது.

— சி. சிவகுமார்.

---

தன் முட்டையின்மீது அமர்ந்து அடைகாக்கும் குருவி புறப் பொருள் ஒன்றையும் பாராது வெறுமனே கண் விழித்திருக்கும்படி அமர்ந்திருக்கின்றது. தியானத்திலமர்ந்திருக்கும் பொழுது யோகியினுடைய கண்கள் அங்ஙனம் ஆகிவிடவேண்டும். தியானத்தில் மனம் மூழ்கும் பொழுது தீவிரமான ஏகாக்ரம் உண்டாகின்றது.

## விநாயகன் ஏன் முதல் பொருளானான்?

விநாயகன் அறிவுப் பொருளான காற்றுப் பூதம். தந்தை (சிவபெருமான்) உண்மைப் பொருளான (தீ) ஒளிப் பூதம். தாய் (உமாதேவி) சக்திப்பொருளான நீர்ப்பூதம். தீயும், நீரும் ஒன்றுக்கொன்று எதிரானவை. காற்றுப்பூதம் ஒளிப்பூதத்துக்கு ஒற்றுமையானது போலவே நீர்ப்பூதத்துக்கும் ஒற்றுமையாயுள்ளது. ஆகவே ஒளிப் பூதமும் நீர்ப்பூதமும் சேர்ந்து உருவாக்கிய காற்றுப்பூதம் தந்தை தாயாரான ஒளியையும் நீரையும் வலம்வந்து அறிவுப் பொருளென்ற பெயருடன் முதல் ஸ்தானத்தில் அமைந்துள்ளது. சகல சீவராசிகளும் உருவாகி வளர்வதற்கு காற்று (அறிவு) மிக மிக முக்கியம். இக் காரணங்களால் சமய வரலாறுகளில் காற்றுப் பூதமான விநாயகனுக்கு எல்லாக் கருமங்களிலும் முதல் இடம் கொடுத்துள்ளார்கள். சிவபெருமான் முப்புரங்களை அழிக்கவேண்டி (மண், பெண், பொன் மூவாசைகள்) தேரில் புறப்படும்போது விநாயகரை நினையாத காரணத்தால் தேர் அச்சு உடைந்ததாக புராணம் கூறுகிறது. (மண்-நிலம், பெண்-நீர், பொன்-நிலம்) நிலம் நீர் ஆசைகளை நீக்கினாலே அப் பூதங்கள் குறைந்து காற்று ஒளிப் பூதம் கூடமுடியும். முப்புரங்களை எரிப்பதற்கு தீ தேவை. ஆனல் காற்றில்லாத இடத்தில் தீ எரியமாட்டாது, ஆகவே முப்புரமெரிக்க காற்று முக்கியம். காற்றை நினையாத காரணத்தால் தேர் அச்சு உடைந்தது என கூறியுள்ளார்கள். காற்றுப் பூதம் பகுத்தறிவுக்கு மிகமுக்கியம். மனிதனுக்கு பகுத்தறிவு இல்லாவிட்டால் அவன் மிருகமாகிறான். பகுத்தறிவுக்குரிய எண்ணங்கள் வளர்வதற்கு காற்றுப்பூத விகிதாசாரம் கூடுதல் மிக மிக முக்கியம். ஆகவே காற்றுப் பூதமான விநாயகனை முதல் வணக்கத்துக்குரியவராக உருவாக்கியுள்ளார்கள்.

# மயக்க நிலை தெளிவோம்!

**சைவ** தோத்திர மஞ்சரியில் நிகழ்காலம் முக்கிய மானது என்ற குறிப்பின் கீழ் பின்வருமாறு குறித்துள் ளார்கள். வாழ்க்கையில் தெரிந்தோ அல்லது தெரியாமலோ தவறுகள் பல செய்து விடுகிறோம். அவைகளை மறந்து விடவேண்டும். எங்கும் நிறைந்துள்ள இறைவனைப் பற்றிய நினைவிலேயே திளைக்க வேண்டும். கடந்த காலத்தில் செய்த கன்மங்களின் பயனை நிகழ்காலத்தில் அனுபவிக்கி றோம். இப்போது செய்யும் கருமங்களின் பயனை வருங் காலத்தில் அனுபவிக்க நேரும் என உண்மையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால், அதே புத்தகத்தின் வேறோர் இடத்தில், வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து அர்ச்சனை செய்வது ஏன்? என்ற குறிப்பின் கீழ், தேங்காய், வெற் றிலை, பாக்கு, பழம் வைத்து அர்ச்சனை செய்வது அறிவு, ஆரோக்கியம், செல்வம், பாவநீக்கம், புண்ணியம் இவைகளைத் தரும் எனக் கூறுகிறார்கள். எங்கும் நிறைந் துள்ள இறைவன் என்று கூறிவிட்டு, அர்ச்சனை செய்வது ஏன்? எனக் கூறுவது தவறாகத் தெரிகிறது. தெய்வ ஆசி வேண்டி திருடியவனும், திருட்டுக் கொடுத்தவனும் பூசை அபிடேகம் செய்கிறார்கள். கோட்டில் வழக்காடும் வழக் காளி, எதிரி, இருவரும் தங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென பூசை, அபிடேகம் செய்கிறார்கள். இவர் களில், ஒருவர் வெற்றி அடைவதும் மற்றவர் தோல்வி அடை வது இயற்கையான செயலாகும். இறைவனை இலஞ்சம்வாங் கும் ஒருவராய் எண்ணியே இவற்றைச் செய்கிறார்கள். இவை மிகமிகத் தவறாகும்.

இறைவன்மீது மனம் உருகி, கண்ணீர் சிந்துவதால் நீர்ப் பூதம் குறைந்து ஒளிப்பூதம் கூடுகிறது. அறிவு வளர்கிறது. இதை விலத்தி எந்தத் தகாத செயலையும் செய்துவிட்டு கோயிலில் அர்ச்சனை செய்தால் அது நிவிர்த்தி ஆகும் என்ற எண்ணம் மேலோங்கி, நாட்டில் தகாத செயல்கள் பெருகுகின்றன. இற்றைக்கு நாற்பது, ஐம்பது வருடங்க ளின் முன் கோயிலுக்கு ஆடு, கோழி நேர்த்திக்கடன் செய்து, பலி கொடுத்து, தமது சொந்த இலாபத்தை வளர்த்துக் கொள்வதாக எண்ணி, செயல் பெற்றதை நன்றாய் அறிந் திருக்கிறோம். இன்று வாய் பேசா பிராணிகளைக் கொல் வது சரியல்ல என்னும் அறிவு, ஏற்பட்டு கூடுதலான பகுதியி னர் இப் பழக்கத்தைக் கைவிட்டுள்ளனர். அது பலி கொடுக் காததால், அவர்களுக்கு எவ்வித கஸ்டமும் ஏற்படவில்லை.

(தொடரும்)

# உண்மையின் தத்துவம்

எமது சமய வரலாற்றில், உண்மைப் பொருளைச் சிவபெருமான் என்று அழைக்கிறார்கள். இப் பிரபஞ்சம் தோன்றுவதற்கு, உண்மைப் பொருளாய் அமைந்தது சூரியன். தமிழ் எண்களில் இக்கருத்தை ஒன்று எண்ணால் குறிப்பிட்டு உள்ளார்கள், இப்பிரபஞ்சம் ஒன்று எண்ணி லிருந்தே ஆரம்பமாகிறது. ஒன்றுக்கு முதல் எண்கள் கிடையாது. சூரியன் தீப்பூதம். நாம் உருவாகுவதற்குக் காரணமாய் அமைந்த தந்தையையும், உண்மைப் பொருள் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். எமது உடலிலுள்ள அங்க அவயவங்கள், (எல்லாம்) உயிர் முதலிய சகலதும் உண்மைக் கோட்பாட்டுக்கு அமையவே இயங்குகின்றன. ஐந்தறிவுள்ள மிருகம் வரையிலான உயிரினங்களுக்குள் வாயால் பேசமுடியாத காரணத்தினால் உண்மையை மறைப்பதுமில்லை, பொய் பேசுவதுமில்லல. ஆகவே அவற்றின் ஐந்து பூதவிகிதாசாரத்தில் கீழ் நிலை அடைவதற்குரிய பூக மாற்றங்கள் ஏற்படுவதில்லை. ஆனால் ஆறறிவு மனிதன் பேசக் கற்றுக்கொண்ட காரணத்தினால், சுயலாபம் கருதி உண்மையை மறைத்து பொய்பேச முற்படுகிறான். இக்காரணங்களினால் அவனது ஐந்துபூத விகிதாசாரம் கீழ் நிலையை அடையக்கூடியதாய் மாறுபட்டு கீழ்நிலைப் பிறப்புகளில் பிறக்கிறான். அவன் கல்வி கற்கும் முறைகளில், சிலவற்றை ஆராய்வோம். கல்வி கற்று சிறிதுகாலம் செல்ல தேர்வு வைக்கிறார்கள். இத்தேர்வுக்குரிய வினாக்களுக்கு விடை அளிக்கும்போது, 4442 + 3331 = 7773 வருகிறது. சில மாணவர்கள் 7772 போட்டாலோ 7774 போட்டாலோ வேறு எதைப்போட்டாலும் பிழை பிழைதான். சின்னப்பிழை பெரிய பிழை என்று கருதுவது கிடையாது. இவ்வாறே ''அறம்செய விரும்பு'' என்று எழுதும்போது சில மாணவர்கள் எந்த ஒரு எழுத்தைக் குறைத்தாலும் பிழை பிழைதான். ஆகவே எமது ஐந்து பூத விகிதாசாரத்தில் எந்த ஒரு சிறு பொய்யாயினும் அதற்குரிய பூதத்தை கூட்

டவே செய்யும். தவறான செய்கைக்குரிய பூதம் கூடியதும் நல்ல செயலுக்குரிய பூதம் குறைகிறது. உண்மையில் எந்த சிறிய தவறும் ஆன்மாவைப் பாதிப்படையச் செய்கின்றன. பாரதியாரின் '' புத்தம் புதிய கலைகள்—பஞ்ச பூதச் செயல் களின் நுட்பங்கள் கூறும், மெத்த வளருது மேற்கே'' அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை'' என்று மிக மிகக் கவலைப்படுகிறார். அவரது கவலையை நீக்க வேண்டியது தமிழன் என்று கூறும் எமது தலையாய கடமை.

---

உ

மலரு

## புதுமைகள் [redacted]குமன்றோ ..........!

சிக்கனமே எமதுமூச்சு சமத்துவமே எமது பேச்சு
உடலுழைப்பே எமது வீச்சு — என்றிருந்தால்
அக்கரை பச்சை கண்டு — ஆசைகொண்டு
ஏமாறும் நிலைமை எம்மவர்க்கு வந்திடாதே
கடமையே தெய்வமென்று காரியமாற்றி வந்தால்
தாய்த்திருநாடு தனித்துவம் காணாதோ இன்று
மடமையை அறுத்து இளமையின் வழிநின்றால்
கருமைகள் விலகி புதுமைகள் மலருமன்றோ!

— தயாளன்

---

உ

## நன்றியுரை

இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு ஒத்தாசை நல்கிய எமது நிறுவன உறுப்பினர்களுக்கும், இத்துறையில் எமது மனநிலைக்கு ஏற்ற கடின உழைப்புடனும் சேவை மனப் பான்மையுடனும் பணியாற்றும் ஸ்ரீ வாணி அச்சக உரிமை யாளர் அவர்களுக்கும் தேவகுருவான காற்றுப்பூத விஇதா சாரம் பெருகி ஞான அறிவை அடைய எமது அகப்பெரு நன்றி உரியதாகுக.

— நிறுவனர்

# பொது நிறுவனங்களின் பாராட்டுக் கடிதங்கள்

தங்கள் வேண்டுகோளின்படி அனைவரும் கடிதத் தொடர்புகளுக்கு தமிழ் மொழியில் மட்டும் கையொப்பம் வைக்கவேண்டுமென்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தங்களுடைய தமிழ் மொழியின் ஆர்வத்தை பாராட்டி அதன் வழியே நாங்களும் எதிர்காலத்தில் செயல்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன்.

6-8-91 தும்பளை கிழக்கு சனசமூக நிலையம்

குரு வணக்கத்தை யான் தவறவிட்டதை சுட்டிக்காட்டினீர்கள். எனது ஆரம்பகால வாழ்க்கை நடைமுறையில் கடிதப் போக்குவரத்து யாவும் பிள்ளையார் சுழி (குரு வணக்கத்துடன்) இட்டு ஆரம்பித்தேன். நாகரீக மார்க்கத்தால் அதைக் கைவிட்டேன். இனிமேல் தொடர்ந்து நானும் இப் பாடசாலைக் குழந்தைகளும் இந் நெறியை வழுவாது பின்பற்றுவோம்.

11-11-91 ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை.

பொருளாதார நெருக்கடியில் நாடு சீர்குலைந்திருக்கும் இச்சமயத்தில் புத்தக வெளியீட்டைப் பற்றிச் சிந்திக்க முடியாத காலத்தில் மக்கள் மனதில் நன்னெறிகளைப் புகட்டக்கூடிய அரிய நூல்களை வெளியிட்டு வைத்திருப்பதை பாராட்ட வார்த்தைகளே இல்லை. தங்களின் தயாள சிந்தைக்கும் - பரோபகார குணத்திற்கும் எமது பாராட்டுக்கள்.

28-1-91 மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம்.

பெருமிதமான தமிழ் நடையில் அரும் பெரும் நற்சிந்தனை நூல்களை வெளியிட்டு தமிழ் இனத்தை வளர்த்தெடுக்கும் தங்களை ஈழம் ~~என்றும்~~, அதில் வியாபாரிமூலை மக்கள்' ஈழத்துச் செந்தமிழ் ஆசான்' எனச் செல்வப் பெயரால் போற்றி அழைப்பதில் பெருமை அடைகின்றனர்.

25-11-91 கலைமணி சனசமூக நிலையம், வியாபாரிமூலை.

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

விநாயகர் — பிள்ளையார், அறிவுப்பொருள், ஊ— எண்களில் 3 கிரகங்களில் வியாழ பகவான், மனித அவயத்தில் வலக்கண் இவைகளைக் குறிக்கும்.

ஞாபகார்த்தநிதி — திரு. சி. ஆ. சிவக்கொழுந்து
திருமதி ஆ. சி. இராசம்மா
**(வ. கோ. சரவணமுத்துவின் மகள்)**
செல்வன் ஆ. சி. மு. சுப்பிரமணியன்

நோக்கம் — அறிவு வளர்ச்சிப் பணி
ஊனமுற்றோர் உதவிப் பணி.
கரும யோகப்பணி

**தருமகர்த்தா சபை**

திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை
*நிறுவனர், நிர்வாகி, ஆயுட்காலத் தலைவர்*

திரு. வ. கு. கணபதிப்பிள்ளை
*B. A. (லண்.) சட்டத்தரணி, உப தலைவர்*

திரு. வ. ச. செல்வராசா
*செயலாளர் – பொருளாளர்*

திரு. க. தங்கராசா
*நிர்வாகப் பொறுப்பதிகாரி*

கௌரவ உறுப்பினர்கள் :

திரு. அ. துரைசிங்கம்
திரு. சு. வேதாரணியம்
திருமதி கோ. கண்மணி

கௌரவ உப உறுப்பினர்கள் :

திரு. வி. க. கேதீஸ்வரநாதன்
திரு; ஆ. க. சிவப்பிரகாசம்

---

*இச் சஞ்சிகை புலோலி மேற்கு, பருத்தித்துறை விநாயகர் தரும நிதியத்தினருக்காக சி. சிவகுமாரன் அவர்களால் உடுப்பிட்டி ஸ்ரீ வாணி அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*